# அனுதை மடங்களிலிருந்து மாணவர்கள் வெளியேற்றம்

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 ( 5-1-67 ) இதழ் 826

பராபவ வருடம் மார்கழி 21 (23?) வியாழக்கிழமை

யாழ்ப்பாணம், புதன்

பங்கீட்டரிசி ஒருகொத்தாகக் குறைக்கப்பட்டதன் எதிரொலியாக கிழக்கு மாகாணத்திலுள்ள இரு அனுதை மடங்களிலிருந்து 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் வெளியேற்றப் படுகின்றனர்.

கல்முனை செல்.மேரிஸ், மட்டக்களப்பு செல். மேரிஸ் பாடசாலைகளிலிருந்து பல மாணவர்களுக்கு அனுதைமட நிர்வாகிகளால் வெளியேற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

ஜி.சி.ஈ. வகுப்புகளிலும் அதற்குக் குறைந்த வகுப்புகளிலும் பயின்றுகொண்டிருக்கும் இம்மாணவர்களுக்கு வெளியேற உத்தரவு கிடைத்ததும் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அனுதை மடத்திலுள்ள மாணவர்களில் அதிகமானோர் மலைநாடு, மன்னர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள். வெளியேற்ற உத்தரவு பெற்ற மாணவர்களில் சிலர் சொந்த இடங்களுக்குத் திரும்பி விட்டனர்.

பங்கீட்டரிசி அளவு குறைக்கப்பட்டதனுல் தான் மாணவர்களை வெளியேற்றுவதாகவு, அவர்களை அரசாங்கம் அளிக்கும் சொற்ப பணத்தினுல் பராமரிக்க முடியாதென்றும், அனுதைமட நிர்வாகிகள், மாணவர்களிடம் தெரிவித்தனராம்.

**வருந்துகிறேம்**

நேற்று யாழ்ப்பாணத்தில் மின்சார விநியோகத்தில் ஏற்பட்ட தடை காரணமாக சில பகுதிகளில் நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகை வாசகர்களுக்குக் கிடைக்கமுடியாது போய்விட்டது. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இச்சம்பவத்திற்காக வருந்துகிறேம்.

# கிழக்கு மாகாணத்தில் வெள்ள அபாயம்

## வாழைச்சேனை அம்பாறையில் கடும்மழை; வெள்ளம்

### பல பகுதிகளில் போக்குவரத்துக்கள் தடை

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பிலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் கடந்த மூன்று தினங்களாகப் பெய்து வரும் கடும் மழையைத் தொடர்ந்து சில இடங்களில் சிறு வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன் பல இடங்களில் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தைத் தொடர்ந்து மக்கள் அங்கிருந்து வெளியேறிவருகின்றனர். நூற்றுக்குமதிகமான வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்து பெய்யும் கடுமையான மழையினுல், மட்டக்களப்புக்கும் பொலன்னறுவாவுக்குமிடையிலுள்ள பகுதிகள்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

**பாதிக்கப்பட்ட பகுதிகள்**

மன்னம்பிட்டியாவில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. வீதிப் போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன.

சித்தாண்டி, கொம்மாதுறை, வெலிக்கந்தை ஆகிய இடங்களில் சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

ஓட்டமாவடி, சங்கர் (?), பேராளை ஆகிய இடங்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வாழைச்சேனை பகுதியை சேர்ந்த இப்பகுதிகளில் வெள்ள நீர்மட்டம் உயர்ந்து வருவதால் ஏராளமான வீடுகள் நீரில் மூழ்கிவிட்டன. மக்கள் இங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர். மகாவலிகங்கையின் நீர்மட்டமும் உயர்ந்துவருகிறது.

வாழைச்சேனைப் பகுதியில் மட்டும் கடந்தமூன்று நாட்களிலும் 13.8 அங்குலமழை பெய்திருக்கிறது.

**அம்பாறையில்**

கடுமையான மழையினுல் அம்பாறை மாவட்டமும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆயிரத்துக்குமதிகமான ஏக்கர் நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன.

கல்லாற்றில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. கல்லாற்று தாம்போதியில் நீர்மட்டம் அதிகரித்திருப்பதால் போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் மழை நீடிக்குமானுல் வெள்ளம் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது. திருக்கோணமலையிலும் கடுமையான மழை பெய்கிறது.

## யாழ்ப்பாணத்தில் துப்பறியும் நாய்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்துக்குப் பொலிஸ் துப்பறியும் நாய் ஒன்று வந்துள்ளது. வட மாகாண பொலிஸ் உதவிச் சுப்பிரிண்டனின் வேண்டுகோளுக்கிணங்கவே கொழும்புப் பொலிஸ் சுப்பிரிண்டன் இந்தத் துப்பறியும் நாயை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியுள்ளார்.

இம்மாதம் 1-ம் திகதி சாவகச்சேரியிலுள்ள இராசையா என்பவரது வீடு உடைக்கப்பட்டு அங்கிருந்த பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்களும், பணமும் களவாடப்பட்டதைத் தொடர்ந்தே சம்பந்தப்பட்ட நபர்களைக் கண்டு பிடிக்க இந்த நாய் அழைக்கப்பட்டுள்ளது.

(ந. நி.)

## பல் வைத்திய நிபுணர்கள் இன்று வேலை நிறுத்தம்

கொழும்பு, வியாழன்

அரசாங்கத் துறையில் இருக்கும் பல்வைத்திய நிபுணர்கள் அனைவரும் இன்று வேலைநிறுத்தம் செய்யவிருக்கிருர்கள்.

அரசாங்க பல்வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் பொதுக்காரியதரிசி டாக்டர் எம். மெண்டிஸ் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள ஒரு அறிக்கையில் வேலைநிறுத்தம் நடைபெறுவது உறுதிதான் என்று அறிவித்துள்ளார்.

பல்வைத்திய நிபுணர்களின் கோரிக்கைகள் பற்றி சுகாதார இலாகாவுக்கு பல கடிதங்கள் எழுதப்பட்டதாகவும் அவை அனைத்துக்கும் 'உங்கள் கோரிக்கைகள் மந்திரிசபையின் பரிசிலனைக்கு வைக்கப்பட்டுள்ளன,' என்று மட்டுமே பதில் கிடைப்பதாகவும் எனவே இனிமேலும் காத்திருப்பதில் அர்த்தமில்லையென்றும் அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**யாழ்ப்பாணத்தில்**

யாழ்ப்பாணத்திலுள்ள பல் வைத்தியப் பிரிவில் கடமையாற்றும் 5 நிபுணர்களும் இன்று வேலைநிறுத்தத்தில் இறங்குவார்களென்று அறிவிக்கப்பட்டுள்ளது. வட

(8 ம் பக்கம் பார்க்க

மின்சார ஊழியர்

## தலைகுப்புற விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

பழுதடைந்த மின்சாரத்தை திருத்துவதற்காக 32 அடி உயரக் கம்பத்தில், அரைவாசிக்கு ஏறிய ஒருவர் தலைகுப்புறவிழ்ந்து மரணமானர் இச்சம்பவம் நேற்று பிற்பகல் இருநெல்வேலியில் நடந்தது.

கன்னியங் காட்டைச் சேர்ந்த எஸ். பாலசுந்தரம் இன் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரிய வந்தது மரணவிசாரண அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை செய்தார்.

## விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளை உடனடியாக அனுப்புங்கள்

### மந்திரிக்கு விவசாயிகள் மகாசபைமகஜர்

கிளிநொச்சி, புதன்

''கிளிநொச்சித் தொகுதியில் உணவுப் பொருட்களின் விலை விஷம்போல ஏறியுள்ளது. அரிசிக்குறைப்பை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வியாபாரிகள் வேறு உணவுப் பொருட்களைப் பதுக்கிவைத்துள்ளனர். இதனுல் இங்குள்ள ஏழை விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பகுதிக்கு விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் விஜயம் செய்து கொள்ளை லாபம் பெறும் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று இலங்கை விவசாயிகள் மகாசபைத் தலைவர் திரு. ந. பொன்னம்பலம் உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டாவுக்கு அனுப்பிய மகஜரில் கோரியுள்ளார்.

''வடமாகாணத்தில் விவசாயத்தில் முதல் இடம் பெறும் கிளிநொச்சித் தொகுதியில் ஒரு புசல் நெல் ரூபா இருபதுக்கு விற்பனையாகிக் கொண்டிருக்க பொதுமக்களின் பணத்தில் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் விதைப்பதற்கு நெல் கேட்டால் கொடுக்க மறுக்கின்றனர்கள்'' என்று தமது மகஜரில் அவர் புகார் கூறியுள்ளார்.

## மின்சார தடை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று முன்தினரவு 2 மணி முதல் நேற்றுமாலை வரை மின்சாரம் தடைப்பட்டதால் பொது மக்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளானர்கள்.

ஆஸ்பத்திரி மற்றும் வர்த்தக ஸ்தாபனங்கள் மின்சாரத் தடையினுல் பாதிக்கப்பட்டன. இப்பகுதிகளில் நேற்று நண்பகல் மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

பருத்தித்துறையில்

## நெசவுபயிற்சி நிலையத்தின் முன் மாதர்கள் சத்தியாக்கிரகம்

### ஆரம்பித்து வைக்கவந்த ஆசிரியை திரும்பிப் போனர்

பருத்தித்துறை, புதன்

நெல்லண்டையில் புதிதாக அரசாங்க நன் கொடையில் கட்டப்பட்ட நெசவுப் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்துவைக்க வந்த ஆசிரியையை நெல்லண்டையைச் சேர்ந்த சுமார் இருநூறு மாதர்கள் தடுத்து நெசவுசாலையைத் திறக்க விடாது வாசலில் சத்தியாக்கிரகம் செய்தனர்.

வழமைபோல ஆசிரியை எட்டுமணியளவில் வந்தபொழுது இச்சம்பவம் நடைபெற்றது. ஆசிரியை உடனே நெல்லண்டை கிராமசேவகரிடம் சென்று முறையிட்டுள்ளார். வடமராட்சிகாரியாதிகாரியிடமும் இது பற்றி புகார் செய்தார்.

சத்தியாக்கிரக மாதரிடம் இது பற்றிக் கேட்கப்பட்ட பொழுது அவர்கள் தங்கள் கிராமத்தில் உள்ள பல பிள்ளைகளை தேர்ந்தெடுக்காது பிற கிராமத்துப் பிள்ளைகளை தெரிவுசெய்திருப்பதாகவும் தங்கள் பிள்ளைகளை இந்த நிலையத்தில் எடுக்கும் வரை நெசவு நிலையத்தைத்திறக்க விடாது வாசலில் சத்தியாக்கிரகம் செய்வதாக முடிவு செய்துள்ளதாகவும்கூறினர்.

இது சம்பந்தமாக தாங்கள் அரசாங்க அதிபருக்கு தந்தி மூலம் அறிவித்துள்ளதாகவும் அதற்கு எதுவித பதிலும் கிடைக்கவில்லையெனவும், தங்களது கோரிக்கை நிறைவேறும் வரை சத்தியாக்கிரகம் நீடிக்குமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சத்தியாக்கிரக நடவடிக்கை காரணமாக நிலையத்தில் பயில வந்த மாணவிகள் சத்தியாக்கிரக த்தைத்தாண்டி (?) மார்க்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

**கோழிகள்:**

கவுஸ் சேவல் - வெருக்மேடு, மறக்கும் குஞ்சுகள் பதிவு செய்யாது பெற்றுக் கொள்ளலாம். விலை நிதானம். அருணா ஏஜென்ஸிஸ், அளவெட்டி. 2212

**கோழிக்குஞ்சுகள்:**

இனம் பிரியாத ஒருநாள் குஞ்சுகள் Unsexed) பதிவு செய்யாது பெற்றுக் கொள்ளலாம். விலைசதம் எழுபத்தைந்து (75) அருணா ஏஜென்ஸிஸ், அளவெட்டி. 2207

**மோட்டார் சைக்கிள்**

மிகச்சிறந்த பாவனையிலுள்ள பி. எஸ். ஏ பண்டிதம் மோட்டார் சைக்கிள் (1 ஸ்ரீ) விற்பனைக்குண்டு. ஆனந்த தேவன், கச்சேரி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி தெற்கு. 2225

**காணியும் வீடும்:**

நல்லூரில் 3 பரப்புக்காணி வீட்டோடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: இலட்சுமி கல்லூரி, 34/5 செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 2301

## கல்வி

**வகுப்புகள்**

ஆங்கிலம்/தமிழ், தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்குப் பதிவியல், வர்த்தகம் முதலிய வகுப்புகள் மும்முரமாக நடைபெறுகின்றன. வர்த்தக பத்திரப் பரீட்சை வகுப்புகள் விசேஷமானவை. விடுதி வசதி உண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2214

**வகுப்புகள்:**

ஜி. சி. ஈ. உயர்தரம், சாதாரணம் கலை/விஞ்ஞானம்/வர்த்தகம், சிங்களம் ஆகிய காலை/மாலை வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்/நெல்லியடி, கரவெட்டி. 2094

**வகுப்புகள்**

ஜி. ஏ. கியூ., ஜி. சி. ஈ. உயர்தரம் கலை / வர்த்தகம்; ஜி. சி. ஈ. சாதாரணம்— கலை/விஞ்ஞானம்/வர்த்தகம் வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மாணவியருக்கு விசேஷ வசதிகள் உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2221

**ஆசிரியர்:**

G. C.E.,(A.L.) G. A. Q., B. A. ஆகிய பரீட்சைகளுக்கு தனித்தனி சந்திக்கக்கூடிய இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் இருக்கின்றார். சந்திக்கவிரும்புவோர் விளம்பர இல. 2308, ஈழநாடு கே/மா என எழுதுமூலம் விண்ணப்பிக்கவும். 2308

## தேவை

**பாமசிஸ்ட்**

தராதரமுள்ள பாமசிஸ்ட் (Pharmacist) தேவை. நற்சாட்சிதரக்கூடிய இருவருடைய பெயர்களையும் உங்கள் வேலை நிபந்தனைகளையும் தருக. விளம்பர இலக்கம் 2217, கே/மா "ஈழநாடு", யாழ்ப்பாணம் என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2217

## வைத்தியம்

**தோய்வு, கசம், நீரிழிவு**

கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்தும் விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எமது டாக்டரின் சிகிச்சை பெற்று விருத்தி அடைந்துள்ளனர். இந்த டாக்டர் சம்பூர்ண ... J. P. கலையாச ... கோவில் வீதி, யாழ்ப்பாணம். வகுப்புகள்

## மரண அறிவித்தல்

சண்டிலிப்பாயைச் சேர்ந்தவரும் ஆசிரியர் யோன் பிள்ளை வைத்திலிங்கத்தின் பாரியாருமான இராசம்மா திய ஆசிரியை எமிலினா ஆக்னஸ் 2-1-67ல் காலமாகினார். டாக்டர் பி. அந்தோனிப்பிள்ளை, புஷ்பமகால், கரவெட்டி. 2222


வெற்றிகரமான 4-வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) 2-30, மாலை 6-30, 9-30 | விஜேந்திரா (அநுராதபுரம்)

முத்துராமன் - கே. ஆர். விஜயா

ஜெய்சங்கர், சுந்தரராஜன், (இருவேடங்களில்)

எல்: விஜயலக்ஷ்மி

நடிக்கும்

பஞ்சவர்ணக்கிளி

இசை: விஸ்வநாதன் - இராமமூர்த்தி

டைரக்ஷன்: கே. சங்கர்


## அந்தியேஷ்டி அழைப்பு

காலமான எமது தந்தை அல்வாயூர்க் கவிஞர் திரு. மு. செல்லையா அவர்களின் அந்தியேஷ்டிக் கிரியைகள் 8-1-67 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். அன்பர்களும், நண்பர்களும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

அனுதாபத் தந்திகள், செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மரணச்சடங்கில் கலந்து பங்குபற்றியவர்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் நன்றிசெலுத்துகின்றேன். மகன் விவேகானந்தன், பாரதி பவனம், அல்வாய். 2223

## வானொலி

### கொழும்பு

**வியாழன் 5 - 1 - 67**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-10 இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன திறப்புவிழா, 10-00 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 தமிழோசை பாடல், 6-30 பேச்சு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 தாள வாத்தியக்கச்சேரி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி.


**யாதவா** (முளாய்)

தினசரி 6-30, 9-30

விடுமுறை நாட்களில் 2-30 மணி

என். டி. ராமராவ் - கே. மாலதி

நடித்த

பாதாளபைரவி

**ஸ்ரீ காலிங்கன்** (இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

ராமராவ் - அஞ்சலிதேவி

நடித்த

லவகுச

(கலர்)

**ராஜா** (யாழ்ப்பாணம்)

தினசரி 4-45, 7-00, 9-45

போயா தினங்களில் 4 காட்சிகள்

WORLD BY NIGHT No. 3

(Adults Only)

**மகாத்மா தியேட்டர்** நெல்லியடி

போயாதினமும் முதல் நாளும் காலை 10 மணி மெட்னி

முத்துராமன் — விஜயா

நடித்த

நாணல்

பி. ப. 4-00 மட்டும்

THE SPARTAN-GLADIATORS

**REGAL—JAFFNA**

NOW SHOWING

Tom Tryon

David Hedison

in

MARINES LET'S GO


# செய்திச் சுருக்கம்

### ஒப்படைத்தனர்

துணுக்காய், புதன்

துணுக்காய் காரியாதிகாரியிடம் திரு. க. கணபதிப்பிள்ளை, திரு. க. சோமசுந்தரம் ஆகியோர் தங்கள் குடும்பக் கூப்பன்களை ஒப்படைத்துள்ளனர். காரியாதிகாரியும் ஏற்கனவே தனது கூப்பனை ஒப்படைத்துள்ளார்.

ஃ ஃ ஃ

### திறப்பு விழா

வண்டத்தரிப்பு, புதன்

முள்ளானை நெசவு நிலையத்தை சமாதான நீதிபதி திரு. க. கனகசபை திறந்து வைத்தார்.

ஃ ஃ ஃ

### தொழிற்சாலையின் பயன்

வண்டத்தரிப்பு, புதன்

"கிராமமுன்னேற்றத்திற்கும் ஒற்றுமைக்கும் அடித்தளமாக அமைவது தொழிற்சாலை. தொழிற்சாலைகளில் தொழிலை மட்டுமன்றி நல்லொழுக்கம், ஒற்றுமை என்பனவற்றையும் அங்கே கற்கவேண்டும்." என இளவாலை சென். ஜேம்ஸ் நெசவு நிலையத்தை திறந்துவைத்தவண பொனிக்கல் பேசும்போது குறிப்பிட்டார்.

நெசவு நிலைய ஆசிரியை செல்வி மகேஸ்வரி வேலுப்பிள்ளை திருவாளர்கள் டேவிட், அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

ஃ ஃ ஃ

### தட்டுப்பாடு

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள கடைகளில் மல்லி, மிளகாய், சர்க்கரைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பருத்தித்துறை வியாபாரிகள் சங்கம் திரு. துரைரத்தினத்தையும், அரசாங்க அதிபரையும் பேட்டி கண்டபோது இப்பொருட்களை தருவிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளனர்.

ஃ ஃ ஃ

### விவசாயப்படையில் சேர முடிவு

பருத்தித்துறை, புதன்

புலோலி கிழக்கு வளர்மதிக்கழகம் சரஸ்தாலயத்தில் கழக உபதலைவர் திரு. மு. யோகராசா தலைமையில் கூடி தற்போது இலங்கையில் உண்டான அரிசி நெருக்கடியை முன்னிட்டு அரசாங்கத்தால் உண்டாக்கப்பட்ட விவசாயப்படைக்கு கழக அங்கத்தவர் சிலரை அனுப்புவதாகவும் எமது பகுதியில் உள்ள வெற்று இடங்களைத் திருத்தி கிழங்கு, சாமை, குரக்கன் போன்ற தானியம் விளைவிப்பதாகவும் முடிவு செய்தது.

ஃ ஃ ஃ

### புதிய பஸ் சேவை

முல்லைத்தீவு, புதன்

புதுவருட தினத்தன்று முல்லைத்தீவில் இருந்து புத்தளத்துக்கு ஒரு புதிய பஸ் சேவையை இ. போ. ச. ஆரம்பித்துள்ளது.

## 'டைம்' சஞ்சிகை கைப்பற்றப்பட்டது

அல்ஜியர்ஸ், ஜன. 5

அமெரிக்கவாரப்பத்திரிகையான 'டைம்' சஞ்சிகையின் இவ்வார வெளியீட்டை அல்ஜியர்ஸ் அரசாங்கம் கைப்பற்றியுள்ளது. அல்ஜீரியப் பிரதமர் பூமெடியனை பற்றித் தகாதமுறையில் எழுதியிருப்பதையொட்டியே அல்ஜீரிய அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. (பி. டி. ஸி.)

## போக்குவரத்து தடைபட்டது

யாழ்ப்பாணம், வியா.

மல்லி வாங்கவந்த ஜனக் கூட்டத்தினால் போக்குவரத்து சிறிதுநேரம் தடைப்பட்டது. இச்சம்பவம் சாவகச்சேரி வீதியிலே இராசா கடைக்குமுன்னால் நேற்றுக்காலை நடந்தது.

மல்லி வாங்கும்பொருட்டு நேற்றுக்காலைமுதல் நூற்றுக்கணக்கான பாவனையாளர், கடைக்கு முன்னால் திரண்டனர். போதிய இடவசதியில்லாததால், பிரதான வீதியையும் மறைத்து ஜனக்கூட்டம் நின்றது. இதனால்சிறிதுநேரம் போக்குவரத்துதடைபட்டது. பின்னர் பொலிஸார் போக்குவரத்து ஒழுங்கை நிலைநாட்டி, பாவனையாளர்களை 'கியூ'வில் ஒழுங்காகநிற்க வழிசெய்தனர்.

## பஸ்ஸிலிருந்து விழுந்தார்

யாழ்ப்பாணம், வியா.

ஓடிக்கொண்டிருந்த இரட்டைத்தட்டு பஸ்ஸிலிருந்து வயோதிபர் ஒருவர் நடுரோட்டில் விழுந்தார். பஸ் உடனடியாக நிறுத்தப்பட்டு, பிரயாணிகள் அவருக்கு முதலுதவியளித்தனர். இச்சம்பவம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் கொல்வின் சந்தியில் நடந்தது. சந்திக்கருகிலிருந்த பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து அந்தவயோதிபர், திடீரெனப்பாய்ந்து பஸ்ஸில் ஏறியபோதே இச்சம்பவம் நடந்தது.

## "தொழிலாளர் திடீர் வேலைநீக்கம்"

திருகோணமலை, புதன்

"அக்டோபர்மாதத்திலிருந்து தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய வேதனங்களை வழங்காமலும் எந்தவித முன்னறிவித்தலுமின்றி சகல தொழிலாளிகளையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டு இன்றுமுதலாளிமார்கள் கொண்டாடுகின்றனர். ஆனால் ஒன்றுமறியாத ஏழைத்தொழிலாளிவர்க்கத்தினர் இங்குதிண்டாடுகின்றனர்" என்று இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தின் திருகோணமலை கிளைகளின் கூட்டுக்கமிட்டியின் செயலாளர் திரு என் ஜீவராசா திருகோணமலை அர்ச். சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தின் கிளைகளினது பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். இக்கூட்டத்திற்கு திரு இம்மானுவேல் தலைமைவகித்தார்.

## தமிழ் படும் பாடு

தெஹிவளை, புதன்

'யாழ்ப்பாணம்' என்ற தமிழ்சொல் 'யமுனபான' என்று மாற்றப்பட்டுள்ளது. தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில்தான் இப்படிமாற்றப்பட்டுள்ளது.

'யாழ்ப்பாண ஆடு' என்று எழுதவேண்டியதற்கு பதிலாக 'யமுனபான ஆடு' என்று அங்குள்ள காட்சியறைவாசலில் எழுதப்பட்டுள்ளது.

## மக்கள் கஷ்டம்

வட்டுக்கோட்டை, புதன்

வலிகாமம் மேற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் தனது கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவ்வாரத்திற்கு கூப்பனுக்கு வழங்கவேண்டிய மல்லி, மிளகாய், உருளைக்கிழங்கு ஆகிய உபஉணவுப்பொருள்களை வழங்காதபடியால் இப்பகுதி மக்கள் இப்பொருள்களைப் பெறமுடியாது பெரும் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "கலைத்தன்மையும் யதார்த்தமும் நிறைந்த இலக்கியப்படைப்பு"

## ஈழத்து எழுத்தாளரின் நாவலுக்கு சென்னையில் பாராட்டு

சென்னை, ஜனவரி 4

"கலைத்தன்மையும் யதார்த்தமும் நிறைந்த சிறந்த இலக்கியப்படைப்பு. சிறிய கலைத்தன்மையோடு நுணுக்கமான கைவண்ணத்தைத் தேர்ந்த ஓவியர்போல் திரு. செ. கணேசலிங்கன் நாவல் முழுவதும் காட்டியுள்ளார்" என்று தமிழ் நாட்டின் சிறந்த நாவலாசிரியர்களில் ஒருவரான திரு. தி. ஜானகிராமன், ஈழத்து எழுத்தாளர் திரு. செ. கணேசலிங்கனின் இரண்டாவது நாவலான "சடங்கு" வெளியீட்டு விழாவின்போது குறிப்பிட்டார்.

வை.எம்.சி.ஏ. பட்டி மன்றத்தின் சார்பில் 29-12-66 வியாழன் மாலை, 'சடங்கு' நாவல் வெளியீட்டுவிழா சென்னையில் நடைபெற்றது. தேநீர் விருந்துடன் நடைபெற்ற இவ்விழாவிற்கு பழம்பெரும் எழுத்தாளரான திரு. தி. ஜ. ரங்கநாதன் தலைமை வகித்தார். தலைவர் தமது உரையில், திரு. செ. கணேசலிங்கன் யதார்த்த பூர்வமாக, அமைதியாக கதையைப் பின்னிச் செல்லும்போது சாதி, சடங்கு முறைகளை மறைமுகமாகத் தாக்கிச்செல்கின்றார் என்றும், கலைத்தன்மை சிறிதும் கெடாத விதமாக சம்பவங்களை சிறந்த எழுத்தாளரின் தரத்தில் கூறிச் சென்றுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

### கலைத்தன்மை குன்றாத நாவல்

நாவலை விமர்சனம் செய்த திரு. தி. ஜானகிராமன் மேலும் கூறியதாவது:-

"தனிமனிதர்களின் உள்ள உணர்ச்சிப் போராட்டங்களை விவரிப்பதே நாவலாகும். அதை 'சடங்கு' என்ற இந்நாவலின் ஓர் உயர்ந்த எழுத்தாளரது திறமையுடன் ஆசிரியர் விவரித்துள்ளார். நாமெல்லாம், பத்திரிகைக்காரர் கேட்டு நெருங்கும்பொழுது அவசரத்தில் எழுதிக்கொடுத்து விடுகிறோம். திரு. கணேசலிங்கன் மிக அமைதியாக பாத்திரங்களைப் படைத்து, அவைத் தாமே கலந்தமைப்பது போல கலைத்தன்மை குன்றாது இந்நாவலைப்படைத்துள்ளார். அவர் பொறுப்புணர்ச்சியுடன் இதேபோல இனிமேலும் கலைத்தன்மை கெடாத சிருஷ்டிகளைத் தருவாரென்று எதிர்பார்ப்போம்."

அடுத்து நாவலை விமர்சித்த திரு. தி. க. சிவசங்கரன் கூறியதாவது:—

"சமுதாயப் பொறுப்புணர்ச்சியோடு கலைத்தன்மை குன்றாது படைக்கப்பட்ட சிறந்த நாவல். ஈழத்து இலக்கியவளர்ச்சியை இந்நாவல் எடுத்துக் காட்டுகிறது. இந்நாவலின்வரும் கந்தையா என்ற பாத்திரம் தமிழிலக்கிய வரலாற்றில் அழியாத இடம் பெறும். ஈழத்து அன்றைய அரசியல் நிலைகளையும் அதனால் பாதிக்கப்படும் தமிழர்களது குடும்ப வாழ்வையும் இந்த நாவலின் மூலம் எம்மால் அறியமுடிகிறது."

இறுதியாக நாவலை விமர்சித்த திரு. டி. செல்வராஜ் கூறியதாவது:—

"இந்நாவல் நிலப்பிரபுத்துவத்தின் சரிவையும் அதனால் பாதிக்கப்படுவோரையும் உணர்ச்சிகளையும் புதிய சமுதாயத்தின் தோற்றத்தையும் சித்தரிக்கிறது. 1953ன் பின் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் ஏற்பட்ட இலக்கிய மறுமலர்ச்சியில் ஈழத்து எழுத்தாளர்களே சிறப்பாக வளர்ந்துள்ளார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்நாவல் விளங்குகிறது. திருமணம் என்பது இரண்டு குடும்பங்களின் சம்பந்தமாக பிரபுத்துவ சமுதாயத்தில் அமைந்திருப்பது முதலாளித்துவ சமுதாயத்தில் எப்படி இருவரின் பிணைப்பாக மாறுகின்றது என்ற தத்துவத்தையும் விளக்கிநிற்கிறது".

நாவல் விமர்சனங்களுக்கு திரு. செ. கணேசலிங்கன் பதிலளித்துப் பேசுகையில், "சொல்லும் பொருளும், அல்லது உருவமும் உள்ளடக்கமும் இலக்கிய விமர்சனத்தின் உச்சாணியாக தொன்று தொட்டு "சொற்குற்றமா? பொருட்குற்றமா" என்ற விவாதம் இருந்து சங்கீர காலம் முதல் தமிழ் நாட்டில் நிலவி வந்துள்ளது. இந்த இரண்டையும் நிலைநிறுத்தி சமன் படுத்திப் படைக்கப்படுவதே உயர்ந்த இலக்கியம்" என்று குறிப்பிட்டு தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்தார்.

கூட்டத் தொடக்கத்தில் திரு. ஆர். தண்டாயுதம், அனைவரையும் வரவேற்று நாவலின் சிறப்பு அம்சங்களையும் குறிப்பிட்டார். பட்டிமன்றச் செயலாளர் திரு. கே. பக்தவத்சலம் நன்றிகூறினார். இந் நாவல் பாரி நிலைய வெளியீடு.

பாலக்காடு

## மணிஅய்யருக்கு 'சங்கீத கலாநிதி' விருது

சென்னை, ஜன. 4

சங்கீத வித்வத்சபையின் இந்த ஆண்டுமகாநாட்டுக்கு தலைமை வகித்த பாலக்காடு மணி அய்யருக்கு 'சங்கீத கலாநிதி' விருது வழங்கப்பட்டுள்ளது.

## சந்திரன் பற்றி ரஷ்ய விஞ்ஞானிகள்

மாஸ்கோ, ஜன. 4

ரஷ்ய விஞ்ஞானிகளின் சந்திரன் 'உயிர்வாழும், மூச்சுவிடும், உயிருள்ளது' ஒன்று என்பதற்கான சாட்சியங்களைச் சேகரித்த 'டாஸ்' செய்தித்தாபனம் அறிவித்துள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன் லெனின்கிராட் பேராசிரியர் ஒருவர், சந்திரனின் கிழக்கு விளிம்பில் அது மூச்சுவிடுவதாகவும், அங்கு புகை, வாயு அல்லது புழுதி மேலே கிளம்புவதாகவும் தெரிவித்திருந்தது. தற்போது நிரூபிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(பி. டி. ஐ.)

## குற்றச்சாட்டில் பலவீனம்

டோக்கியோ, ஜன. 4

தெற்கு ஜப்பானில் ஒரு பட்டத்தில் தொழிற்சங்க உத்தியோகஸ்தரான, 87 வயதுடைய திரு. எடமோசி இமோற்றோ என்பவர் தனது மோட்டார்சைக்கிளை கடுகதியாக ஓட்டியதற்குக் குற்றம் சாட்டப்பட்டார்.

அவர் தமதுசார்பில்தனது மோட்டார் சைக்கிள் உற்பத்தியாளர்கள்மீதும், அரசாங்கத்தின்மீதும் வெவ்வேறு குற்றச்சாட்டுகளைத் தாக்கல்செய்தார்.

ஒரு மணித்தியாலத்துக்கு பதினைட்டரைமைல் என்ற கட்டுப்படுத்தப்பட்ட வேகத்துக்கும் அதிகமான வேகத்தையுடைய மோட்டார் சைக்கிளைத் தயாரித்தபடியால், தன்மீது சுமத்தப்பட்ட குற்றத்தில் உற்பத்தியாளர்களுக்கும் பங்குண்டு என்று வாதித்த திரு. இமோற்றோ, அந்த மோட்டார் சைக்கிளை அவ்விதம் உற்பத்திசெய்ய அனுமதித்தபடியால் அரசாங்கமும் குற்றவாளியாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

வேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டியதற்காக திரு. இமோற்றோ 7 டொலர் அபராதம் விதிக்கப்பட்டார்.

## ரஷ்ய கப்பலை சீனு தடுத்தது

மாஸ்கோ, ஜன. 4

ரஷ்ய கப்பலொன்றை சீனத் துறைமுகமான டெயிரேனில் 20 நாட்களாகத் தடுத்து நிறுத்தி வைத்ததற்காக சோவியத் ரஷ்யா சீனுவுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது. இச்சம்பவம், இரு நாடுகளுக்கிடையேயான வழக்கமான கப்பல் போக்குவரத்தைப் பாதித்துள்ளதாகவும் ரஷ்யா அறிவித்துள்ளது. இச்சம்பவத்துக்காகச் சீனுவிடம் நஷ்ட ஈடு [illegible] தீர்வு [illegible] வும் [illegible]ப்பட்டது.

## சோவியத் ஜனதிபதி பாப்பரசரை சந்திப்பார்

ரோமாபுரி, ஜன. 4

சோவியத் ஜனதிபதி நிக்கொலாய் பொட்கோர்னி இம்மாதம் பாப்பரசர் போலை சந்திப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. இச்சந்திப்பே ஒரு பாப்பரசருக்கும் சோவியத்நாட்டின் தலைவர் ஒருவருக்குமிடையே நடக்கும் முதல் சந்திப்பாகும்.

திரு பொட்கோர்னி ஜனவரி 26ல் இரண்டு நாள் உத்தியோக பூர்வமான விஜயத்தில் ரோமாபுரி வந்து சேருவாரென்றும், பல இத்தாலிய நகரங்களைப்பார்வையிட்டபின்னர் அவர் மீண்டும் ரோமாபுரிக்குத் திரும்பி ஜனவரி 29-ல் பாப்பரசர் போலை சந்திப்பாரெனவும் விஷயமறிந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(பி. டி. ஐ.)

## வழுவூராருக்கு தேசிய விருது

புதுடில்லி, ஜன. 4

இந்திய சாகித்திய அகடமியினரின் பரதநாட்டியத்துக்கான தேசிய விருது வழுவூர் இராமையாபிள்ளைக்கு வழங்கப்பட்டது.

இசை, நாடகம், கிராமியகலை, ஆகிய துறைகளில் சிறப்பாகப் பணி புரிந்துள்ளதை கௌரவிக்கும் வகையில் மைசூர் மகாராஜா ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார், ஸ்ரீ அல்லாஷ் பட்டாச்சாரியா, ஸ்ரீ இ. கிருஷ்ண அய்யர், ஸ்ரீ சம்புமித்திரா ஆகியோருக்கு சங்கீத நாடக அக்கடமியின் கௌரவ அங்கத்தவர் பதவிகளை பிரதமர் இந்திரா வழங்கினர்.

இசையில் விருதுபெற்றவர்கள்: சங்கர்தான் (ஹிந்துஸ்தானி வாத்திய இசை); எம். ஆர். ஸ்ரீரங்கம் அய்யங்கார் (கர்நாடக வாய்ப்பாட்டு); பி. எஸ். வீருசாமி பிள்ளை (நாகசுரம்); ஸ்ரீமதி சித்தேஸ்வரிதேவி (ஹிந்துஸ்தானி வாய்ப்பாட்டு).

## பிரிட்டிஷ் ஆலோசனையை வடவியட்னும் நிராகரித்தது

ஹொங்கொங், ஜன. 4

வியட்னும் போர்த் தீர்வுக்காக பிரிட்டன் சமர்ப்பித்த ஆலோசனையை வடவியட்னும் நிராகரித்துள்ளது. வடவியட்னும், தென்வியட்னும், அமெரிக்கப் பிரதிநிதிகள் மகாநாடொன்றில் சந்தித்துப் பிரச்னையைப்பற்றிக் கலந்தாலோசிக்க வேண்டுமென்ற பிரிட்டனின் இந்த ஆலோசனையை வடவியட்னும் நிராகரித்து, அமெரிக்காவின் வாலைப்பின் பற்றுவதாக பிரிட்டனைக் குற்றம் சாட்டியுள்ளது.

## யு தாண்ட் முயற்சி எடுக்கார்

நியுயோர்க், ஜன. 4

மேற்கொண்டு வியட்னும் போர் தீர்வுக்காகத் தாம் தற்போது எதுவித முயற்சியும் எடுக்கவில்லையென ஐ. நா. பொதுக் காரியதரிசி யு தாண்ட் இங்கு கூறியுள்ளார்.

வடவியட்னும் தலைநகரான ஹனோய் மீதான குண்டுவீச்சை நிபந்தனையின்றி நிறுத்துமாறு அவர் அமெரிக்க அரசாங்கத்தைக் கேட்டிருந்தார். ஆனால் அதை அமெரிக்க அரசாங்கம் நிராகரித்துவிட்டது.

## சினிமா தயாரிப்பாளர் சுட்டுத் தற்கொலை

சென்ற். ஜெரொப்பெஸ் ஜன. 4

உலகச் சினிமா அழகி எனப் போற்றப்படும் பிரிஜெட் பார்டோவைப் புகழேணியில் ஏற்றி வைக்க உதவிய சினிமாத் தயாரிப்பாளரான ராவோல் லெவி என்பவர், தனது 34 வயதுக் காதலி ஒருத்தி தன்னைக் கைவிட்டுவிட்டதாகத் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இவரது வயது 44.

## தொழிற்சங்கம் மூடப்பட்டது

பிராக், ஜன. 4

முதலாளித்துவத்துக்குச் சார்பாக உழைத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர், சீனத் தொழிற்சங்கங்களின் சம்மேளனமும் அதன் பத்திரிகையும் மூடப்பட்டுள்ளனதாகப் பீக்கிங்கிலிருந்து இங்கு வந்துள்ள செய்திகள் தெரிவித்துள்ளன.

(பி. டி. ஐ.)

## குர் ஆன் வாசிப்புப் போட்டி

கோலாலம்பூர், ஜன. 4

இங்கு நடைபெற்று முடிந்த 1966-ம் ஆண்டுக்கான சர்வதேச திருக்குர் ஆன் வாசிப்புப் போட்டியில் மலேஷியாவும், சிங்கப்பூரும் முறையே முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றன. மூன்றுவது இடத்தை பிலிப்பைன்ஸ் எடுத்தது.

(பி டி ஐ)

## உணவு உற்பத்தியில் பள்ளிக்கூடங்கள்

கொழும்பு, புதன்

பள்ளிக்கூடங்கள் விடுமுறைக்குப் பின் மீண்டும் திறக்கும்போது, ஜனவரி 9-ம் திகதியிலிருந்து பள்ளிக்கூட வேலை விஸ்தரிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படும். உணவு உற்பத்தி வேலைக்காக சுமார் 1,000 ஆசிரியர்களைக் கல்வி இலாகா தேர்ந்தெடுக்கும்.

பள்ளிக்கூடங்களுக் கருகாமையில் உள்ள முடிக்குரிய காணிகளுக்கு விண்ணப்பிக்கவும், பள்ளிக்கூடத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கவும் பள்ளிக்கூட அதிபர்கள் கல்வி மந்திரியினால் கோரப்பட்டுள்ளனர்.

பள்ளிக்கூடங்களுக்கான உணவு உற்பத்திக் கூட்டுறவுச்சங்கங்களைக் கல்வி அதிகாரிகள் அமைப்பாளர்களாகக் கொண்டிருக்கும் இயக்கங்களில் பள்ளிக்கூடங்கள் மாவட்ட விவசாய சங்கங்களுடன் ஒத்துழைக்கும்.

## மண்ணெண்ணை குடித்தார்

### சாராயம் என நினைத்து

யாழ்ப்பாணம், வியா.

சாராயம் என நினைத்து மண்ணெண்ணையைக்குடித்த யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த சரவண கணேஷ் (23 வயது) என்ற இளைஞர் அபாயகரமானநிலையில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் நடந்ததினத்திற்கு முதல் இரவு அரைப்போத்தல் சாராயத்தை வாங்கி வந்து அதில் சிறிதளவைக்குடித்துவிட்டு மிகுதியைவைத்ததாகவும், அடுத்த நாள் காலையில் எழும்பி மிகுதிச்சாராயம் என நினைத்து அருகிலிருந்த மண்ணெண்ணைப் போத்தலை எடுத்து அதற்குள்ளிருந்த மண்ணெண்ணையைக் குடித்ததாகவும் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் அவர் தெரிவித்துள்ளார். பொலிஸார் மேலும் புலன்விசாரணை செய்கின்றனர்.

## புதுவருடத்தில் ஏற்பட்ட தீவிபத்து பலர் வீடிழந்தனர்

கொம்பனித்தெரு, புதன்

புதுவருடதினத்தன்று அதிகாலை ஏற்பட்ட பயங்கர தீ விபத்தினால் பலர் வீடுகள் தீக்கிரையாகின. இதன்விளைவாக பலர் வீடிழந்தனர்.

இவ்விபத்து கொம்பனித்தெருவிலுள்ள வெக்சோல் வீதியில் இருக்கும் கொரியா என்னும் இடத்தில் நிகழ்ந்தது. இத்தீவிபத்தில் சிக்கிய வீட்டுச் சொந்தக்காரர்கள் தங்களது கைகளில் அகப்பட்ட பொருட்களை எடுத்துக் கொண்டு அவதியவதியாக மக்கள் வெளியேறினர்.

இந்த பெருந்தீவிபத்து உடனடியாக கொழும்பு நகர தீ அணைக்கும் படையினருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் ஸ்தலத்திற்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர். தீவிபத்தினால் வீடுகளை இழந்துள்ள குடும்பங்களை கொழும்பு முனிசிபல் உயர்தர அதிகாரிகள் நேரில் [illegible] பார்வையிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

சற்குரு தரிசனம் சகல பாக்கிய சுகம் தாவின மணி நீ தினம். —நற்சிந்தனை

# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Pox 49 JAFFNA
Telegram EELANADU Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு மார்கழி 21ம் (5-1-67)

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் இன்று ஆரம்பமாகிறது. அரசாங்க இலாகாவாக இதுவரை இருந்து வந்த ஒலிபரப்புச் சேவை இனித் திறைசேரி 'சிவப்புநாடா' கட்டுத் திட்டங்களுக்கு அஞ்சாமல் சிறிது சுதந்திரமாக இயங்க முடியும். 'இலங்கை வானொலி' யாக இருந்தது இனி 'இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன வானொலி' யாக மாறுகிறது. பெயர் மாற்றம் மட்டுமல்ல ஒலிபரப்புச் சேவையின் தரத்திலும் நல்ல மாற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கலாம்.

இலங்கையின் ஒலிபரப்புச் சேவையை கூட்டுஸ்தாபனம் ஒன்றிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற யோசனை புதியதல்ல. ஆனாலும் சமீபத்தில் நியமிக்கப்பட்ட வானொலி விசாரணைக் கமிஷன் செய்த சிபார்சின் பயன் இன்று முதல் ஒலிபரப்புச்சேவை கூட்டுஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்படுகிறது. இலங்கை வானொலியின் சிங்கள சேவையைப் பொறுத்தவரையில் சென்ற சில வருடங்களில் நல்ல முன்னேற்றமேற்பட்டிருக்கிறது. அதன் தரம் வெகுவாக உயர்ந்துள்ளது. தமிழ் சேவையைப் பொறுத்தவரையில் அதன் தரம் வரவரக் குறைந்திருக்கிறதென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். இதற்குப் பல்வேறு காரணங்களிருக்கலாம். வானொலி விசாரணைக் கமிஷன்முன் சாட்சியமளித்தவர்கள் பலரும் வானொலித் தமிழ் ஒலிபரப்புச்சேவையின் குறைகளை எடுத்துக் கூறியிருந்தனர். அவைகளைத் திருத்த வேண்டிய அவசியத்தையும் வழிவகைகளையும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

யாழ்ப்பாணம், மற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் இலங்கை வானொலியின் தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்பதைவிட திருச்சி, சென்னை முதலிய இந்தியவானொலி நிகழ்ச்சிகளையே பெரிதும் விரும்பிக் கேட்பதுண்டு. இசை நிகழ்ச்சியாயினும் சரி நாடக நிகழ்ச்சியாயினும்சரி மற்றும் கிராம நிகழ்ச்சிகளையும் கூட இந்திய வானொலி தரம் நிறைந்ததாக ஒலிபரப்புவதே இதற்கு முக்கிய காரணம். இதுதவிர வடமாகாணத்திலும் மற்றும் சில பகுதிகளிலும் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளைத் தெளிவாகக்கேட்க முடியாதிருப்பதும் மற்றொரு காரணம்.

இலங்கையில் சிறந்த கலைஞர்கள் இல்லாமலில்லை. அவர்களுக்கு வசதிகளும் வாய்ப்புகளும் அளிக்கப்பட்டால் இங்கும் தரமான வானொலி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படலாம். சிங்கள, ஆங்கில, தமிழ் சேவைகளுக்கு நிதி ஒதுக்குவதிலும் இதற்கு முன்னர் பாகுபாடு காட்டப்பட்டு வந்திருக்கிறது. கலைஞர்களுக்கிடையிலும் பாகுபாடு காட்டப்பட்டதாகப் புகார் வெளிவந்ததுண்டு.

சுறுசுறுப்பும் சிறந்த நிர்வாகத் திறமையும் உடைய திரு. நெவில் ஜயவீரா ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முதல் டைரக்டர்ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்குத் தமிழ் அறிவும் உண்டு. யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றியதுடன் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களையும் பண்பாட்டையும் அறிந்தவர். யாழ்ப்பாணத்தில் ஓர் உபவானொலி நிலையம் அல்லது ஒலிபரப்பு நிலையம் அமைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை பொதுவாக ஆதரித்தவர். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்ஒலிபரப்புச்சேவை, செய்தி அறிவிப்புதொடக்கம் கிராம நிகழ்ச்சிவரை தரமானதாக அமையவும் நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள தமிழ் பேசும் மக்கள் இலங்கைத்தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழவும், வானொலிக் கலைஞர்களுக்கிடையில் பாகுபாடு நீங்கவும் திறமையுள்ளவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவும் அவர் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஒலிபரப்பு நிலையமொன்றை அமைக்கும் முயற்சியை வானொலிக் கூட்டுத்தாபனம் துரிதப்படுத்தி நிறைவேற்ற வேண்டும். இதற்கு திரு. ஜயவீராவின் உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்குமென்று எதிர்பார்ப்போம்.

## வானொலி கூட்டுத்தாபனம்

# 'ரேடியோ லங்கா'!

(நேற்றைய தொடர்ச்சி)

வானொலி கூட்டுஸ்தாபனம் செய்யக் கூடிய செய்ய வேண்டிய மற்றோர் அபிவிருத்தி வெளிநாட்டுச் சேவை ஒன்றை ஆரம்பித்தலாகும்.

இலங்கையைப் பற்றியும் இலங்கையின் கொள்கைகளைப் பற்றியும் பிறநாடுகளில் தவறான அபிப்பிராயங்கள் ஏற்படாமலிருப்பதற்கும், பிற பிறநாடுகளிலுள்ளவர்கள் உண்மையான நிலைமையை அறிந்துகொள்வதற்கும், இலங்கை மக்களின் பண்பாட்டை வெளிநாட்டவர்கட்கு உணர்த்துவதற்கும் இத்தகைய சேவை ஒன்று மிகவும் உதவியாயிருக்கும். மலேசியா முதலிய நாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் தங்கள் தாய் நாட்டின் குரலைக் கேட்பதற்கும் இங்கு நடக்கும் சம்பவங்களை உடனுக்குடனே அறிந்து கொள்வதற்கும் இது உபயோகமானது. முக்கியமான பிரச்னைகள் எழும்போது (உதாரணம்: இலங்கை இந்தியர் பிரச்னை) இலங்கை அரசாங்கத்தின் கொள்கையைப் பிற நாடுகளுக்குத் தெளிவுபடுத்திக்கூறுவதற்கும் வெளிநாட்டு சேவை அரியதோர் சாதனமாகும்.

இதற்கு மிகவும் அவசியமான தேவை, ஒரு சக்தி வாய்ந்த ஒலிபரப்பி யந்திரம் (ட்ரான்ஸ்மிட்டர்) குறைந்தது 100 கிலோவாட் சக்தியுள்ள ஒலிபரப்பியாவது இருந்தால்தான் தூர தேசங்களில் உள்ளவர்கள் எமது நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்கமுடியும். எமது வர்த்தக ஒலிபரப்பின் புகழுக்கு முக்கியமான காரணம் அதற்காக உபயோகிக்கப்படும் சக்திவாய்ந்த ஒலிபரப்பி யந்திரமே.

வானொலிக் கூட்டுத்தாபனத்தின் ஆரம்பதினமாகிய இன்று ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே குறிப்பிடவேண்டும்.

ஒரு நிகழ்ச்சி ஆரம்பிக்கும் போது முதல் முதலாக நிலையத்தின் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்திக் கொள்வார்களல்லவா? இலங்கை ஒலிபரப்பு நிலையம் ஆதிகாலத்தில் 'கொழும்பு மாநகரிலிருந்து பேசுகிறோம்' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டது. சில காலம் செல்ல இந்த அறிவித்தல் மாறி 'இது கொழும்பு ரேடியோ நிலையம்' என்றாகிற்று. பின்னர் 'ரேடியோ சிலோன்' வந்தது. அதற்குப்பின் 'இலங்கை வானொலி' யாகிற்று. இன்று தொடக்கம் இன்னும் ஒரு புது நாமம் சூட்டப்படும் என்பது நிச்சயம். அநேகமாக 'இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்' என்று வரட்சியாகக் கூறப்போகிறார்கள் என்றே நினைக்கிறேன்.

வி. என். பி

கூட்டுத் தாபனம் வேறு, ஒலிபரப்பு நிலையம் வேறு என்பதாக இருக்கவேண்டும். அந்த நிலையத்துக்குச் சுருக்கமான, அழகான, கம்பீரமான ஒரு பெயர் இருக்க வேண்டும். 'இது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்' என்று சொல்லும் போது என்னவோ வாய்ப்பாடு ஒப்புவிப்பது போல இருக்கப் போகிறது.

இன்னொன்று. இந்த அறிமுகப் பெயர் எல்லா மொழிகளுக்கும் பொதுவானதாய் இருக்க வேண்டும். தமிழ் அறிவிப்பாளர் ஒன்றைச் சொல்ல, சிங்கள அறிவிப்பாளர் இன்னொன்றைச் சொல்ல, ஆங்கில அறிவிப்பாளர் வேறொன்றைச் சொல்ல எல்லாம் ஒரே குழறுபடியாயிருக்கப் போகிறது.

சுமார் இருபது சொச்ச மொழிகளில் ஒலிபரப்பும் இந்தியவானொலி அந்த இருபது சொச்ச மொழிகளிலும் 'ஆகாஷவாணி' தான்.

நமது வானொலிக்கும் இப்படி ஓர் அழகான புதிய பெயர் கண்டுபிடிப்பதற்கு அதிக தூரம் போகத்தேவையில்லை. கார், சைக்கிள் என்பதைப் போல ரேடியோ என்ற சொல்லும் இப்பொழுது சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர் எல்லோருடைய வாயிலும் சரளமாக அடிபடுகிறது. சாதாரணமான மனிதன் 'என்னுடைய ரேடியோ பழுதாகிவிட்டது' என்று கூறுவானேயொழிய 'என்னுடைய வானொலி பழுதாகிவிட்டது' என்று கூறமாட்டான்.

'லங்கா' என்ற மூலத்திலிருந்து தான் இலங்கை பிறந்தது. 'லங்கா' என்பது இலங்கையிலுள்ள எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு சொல். வெளிநாட்டவர்களுக்கும் 'லங்கா' என்ற சொல் பழக்கமாகி விட்டது.

'ரேடியோ லங்கா' என்று சொல்லிப் பாருங்கள். எவ்வளவு அழகாக ஒலிக்கிறது!

சகல விதமாகப் பார்த்தாலும் மிகவும் பொருத்தமான இப்பெயரை வைப்பதற்கு அதி தீவிர தேசியமும், தனித் தமிழ் மோகமும், வைதீகமும் குறுக்கே வரப்படாது.

## மின்சாரக்கோளாறு

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் நேற்றுப் பிற்பகல் வரை யாழ்ப்பாணத்தில் மின்சார விநியோகம் நடைபெறவில்லை. மற்பகல் சில பகுதிகளுக்கு மட்டும் மின்சாரம் கிடைத்தது. இதனால் பொதுமக்களும், வர்த்தக, தொழில் ஸ்தாபனங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டன. சுன்னாகத்திலுள்ள அரசாங்க மின்சார உற்பத்தி நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் மின்சாரக் குழாய்க்கம்பிகளில் எங்கோ ஓர் இடத்தில் ஏற்பட்ட கோளாறுதான் இதற்குக் காரணம்.

இன்றைய உலகில் மின்சாரம் இன்றியமையாதது. தொழில் வளர்ச்சிக்கும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் மின்சாரம் மிகமிக அவசியமாகிவிட்டது. இலங்கையின் கிராமங்களுக்கும் விரைவில் மின்சாரம் கிடைக்க வழி செய்யப்படுமென தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் அமைச்சர்கள் உறுதி கூறினர். இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை இலங்கையின் தேவைக்கு உபயோகித்து மிகுதியை இந்தியாவுக்கு விற்பதற்குக் கூட ஓர் அமைச்சர் ஆலோசனை செய்தார். கிராமங்களுக்குப் புதிதாக மின்சார விநியோகம் செய்வதிருக்கட்டும்; இப்பொழுது விநியோகம் செய்யும் இடங்களுக்காவது மின்சாரம் ஒழுங்காகக் கிடைத்தாலே பெரிய காரியம்.

மின்சார விநியோகத்தில் அரசாங்கத்துக்கு நல்ல இலாபம் கிடைக்கிறது. இலாபம் சம்பாதிக்கும் பொருளின் விற்பனையில் கவனஞ் செலுத்தாத மின்சாரப் பகுதியினர் எப்படிப் பிற நாட்டுக்கு மின்சாரம் விற்று இலாபம் பெறப் போகின்றனர்? மின்சார விநியோகம் தடைப்படுவதால் தொழில் ஸ்தாபனங்களுக்கு ஏற்படக் கூடிய நஷ்டங்களுக்கு மின்சார இலாகாவே நஷ்டஈடு செலுத்தவேண்டும். மின்சார விநியோகத்தைச் சீராகச் செய்யும் பொறுப்பை அரசாங்க மின்சார இலாகா செய்ய முடியாவிட்டால் [illegible] பொறுப்பை ஒப்படைத்துவிடுவதே சிறப்பு.

# கடதாசி கன்னிகள்

அமெரிக்காவில் இனிமேல் துணிப்பஞ்சம் ஏற்படும் என்று எவரும் கவலைப்படத் தேவையில்லை. அங்குள்ள மாது சிரோன்மணிகள் கடதாசியால் செய்த ஆடைகளை அணிய ஆரம்பித்திருக்கிறார்கள். இதனால் ஒரு வேளை கடதாசிக்கு பஞ்சம் ஏற்படுமேயன்றி துணித்தட்டுப்பாடோ, கப்பலோ, பஞ்சமோ எதுவும் உண்டாகாது.

அமெரிக்க பெண்மணிகளின் முன்மாதிரியை இனிமேல் ஆண்மணிகளும் பின்பற்ற ஆரம்பித்து விட்டார்களானால் அப்புறம் சொல்லவேண்டியதில்லை.

கடதாசி கவுன் போட்டுக்கொண்டு நாற்காலியில் உட்காரும்போது பின்பக்கத்தில் 'பரூர்' என்று ஒரு சத்தம் ஏற்படக்கூடும் என்பதற்காக முன் எச்சரிக்கையுடன் ஒவ்வொரு பெண்மணியிடமும் கைவசமாக ஒரு சுருள் பசைபூசிய 'ஸ்டிக்கிங் பிளாஸ்டரும்' இருக்கிறதாம். வெடிப்புக் கண்டவுடனே அந்த இடத்தில் உடனே ஒட்டு போட்டுவிடலாமல்லவா?

பூப்போட்ட கடதாசிகவுன்களுமுண்டு வெறும் வெள்ளையிலுமுண்டு. வெள்ளைச்சட்டைக் கவுனுடன் கடைக்காரர் இலவசமாக வர்ணமையையும் தூரிகையையும் கொடுக்கிறார்களாம். அம்மணிகள் வீட்டுக்குப்போய் ஆறுதலாக தங்களுக்கு இஷ்டமான பூக்களையோ படங்களையோ உடையில் வரைந்து கொள்ளலாம்.

உடையணியில் இதை ஒரு புரட்சி என்று கூறலாமல்லவா?

சில நாட்களுக்கு முன்பு அந்த நாகரீகமான நாட்டிலே இந்த உடைவிஷயத்தில் இன்னொரு பெரிய புரட்சி ஏற்பட்டது. ஒருபிரபலமான ஹோட்டலில் பரிசாரகர் வேலை பார்க்கும் நாரீமணிகள் ஒரு வயிற்றுக்கு மேல் ஒன்றுமே இல்லாமல் காட்சியளித்தனர். இந்தக் கண்கொள்ளாக்காட்சியைக் கண்டு களிப்பதற்கு ஏகப்பட்ட கூட்டம்கூடி இறுதியில் உள்நாட்டுக் கலகம் பிறக்கக் கூடுமென நினைத்தோ என்னவோ பொலிசார் ஒன்றுமறியாத அப்பெண்களைக் கைதுசெய்து கொண்டுபோய் விட்டார்கள்.

நாகரிகத்தின் போக்கு இதுவாயிருந்தால் சந்திரனுக்குப் பிரயாணஞ்செய்யும் முதலாவது பெண் பிறந்தநாள் உடையுடன் அங்கு போய்ச் சேரக்கூடுமென்று ஜோசியம் கூறலாமல்லவா?

ஃ

இந்த அரிசி வெட்டு வந்ததுதான் தாமதம். எதி

## நாட்டிலும் நகரிலும்

[illegible] எத்தனை அறிவாளிகள் தங்கள் அரிதான கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

எல்லாக் கமக்காரரையும் அரசாங்க ஊழியர்களாக வேண்டுமென்று ஒரு பழுத்த மூளை கூறுகிறது. ஆஹா எவ்வளவு அசலான யோசனை. அவர்களுக்கு மாதச்சம்பளம், ஓவர்டைம், நயிட் அலவன்ஸ், பென்ஷன் எல்லாம் கொடுக்கவேண்டும். அப்பொழுது வேலையில்லாமல் இருப்பவர்கள் எல்லாம் கமம் செய்யத் தொடங்குவார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கும். எல்லா அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுக்கப் போதிய பணமில்லாமல் அரசாங்கம் வெளிநாடுகளிடம் கடன்வாங்கும். கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாவிட்டால் இலங்கை அடகு வைக்கப்படும்.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தப்பட்ட சிறுமி காட்டில் கைதானார்

## சந்தேகநபர்களுக்கு ரிமாண்ட்

யாழ்ப்பாணம், புதன்

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்டதாகச் சொல்லப்படும் யாழ்ப்பாணம் கரையூரைச் சேர்ந்த பன்னிரண்டு வயதுச் சிறுமியான நப்பீல் குணவதியையும் அவரைக் கடத்திச்சென்றதாகக் கருதப்படும் சந்தேக நபர்களான தோமஸ் தேவசகாயம் என். டேவிட் என்ற இருவரையும் நேற்றுமுன்தினம் ஆனையிறவிலுள்ள காடொன்றில் வைத்து கரையூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு எம். துரைசிங்கம் கைது செய்தார்.

கடந்தமாதம் 24-ம் திகதி கரையூர் இராஜேந்திரம் வீதியைச்சேர்ந்த நப்பீல் என்பவரின் மகளான குணவதி வீட்டிலிருந்து காணாமல் போய்விட்டதாகக் கரையூர் பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவரைக்கண்டு பிடிப்பதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

இதுசம்பந்தமாகப் பொலிசார் நடத்திய புலன் விசாரணையின்போது கிடைத்த இரகசியத் தகவல்களைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரையும் சார்ஜன்ட் திரு. எம். துரைசிங்கம் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. கி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் ஆஜர்செய்த போது சந்தேக நபர்களான தேவசகாயம். டேவிட் ஆகிய இருவரையும் இம் மாதம் 12-ம் திகதி ரிமாண்டில் வைக்குமாறும் குணவதியை பெற்றோருடன் செல்லுமாறும் மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். (ந.நி)

---

## அரிசிப் புத்தகத்தை ஒப்படைத்தனர்

கிளிநொச்சி, செவ்.

பிரதமர் விடுத்த வேண்டுகோளுக்காக, அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் பொருட்டு, கிளிநொச்சி தொகுதியில், பலர் தங்கள் அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தை ஒப்படைக்க முன் வந்துள்ளனர்.

காரியாதிகாரியிடம் 30 பேர்கள் தங்கள் பங்கீட்டரிசிப் புத்தகத்தை ஒப்படைத்தனர்.

மற்றும் 25 விவசாயிகள் தங்கள் அரிசிப்புத்தகத்தைஒப்படைக்க முன் வந்துள்ளனர்.

---

## தட்டுப்பாடு

புத்தளம், செவ்வாய்

புத்தளம் பெட்ரோல் நிலையங்களில் பெட்ரோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் பதினாறு மைலுக்கு அப்பால் உள்ள முந்தல் பெட்ரோல் நிலையத்துக்குச் சென்று பெட்ரோல் வாங்கவேண்டியுள்ளன. இதன் விளைவாக வாடகைக் கார்ச்செல்லும் செலவையும் சாரதிகள் அதிகரித்து விட்டனர். மண்ணெண்ணெய் விளக்குகள் பாவிப்பவர்களும் இதனால் பெரும் கஷ்டப் படுகின்றனர்.

---

## 2கிராமசேவகர்கள் நியமிக்கப்படுவர்

சுழிபுரம், செவ்வாய்

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி பிரிவில் மேலும் இரண்டு கிராம சேவகர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர். தற்போதுள்ளசுழிபுரம் பகுதியிலுள்ள ஓர் பகுதிசுழிபுரம் கிழக்குப் பிரிவாகவும் மற்றது, சங்கானை, பிராம்பத்தை, வடலியடைப்பு ஆகிய சில பகுதிகளை உள்ளடக்கி சங்கானை வடக்கு என்ற பிரிவாகவும் பிரிக்கப்படவிருக்கின்றன. இதன் காரணமாக மேலும் இரண்டுகிராமசேவகர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

---

## பாராட்டு

ஊர்காவற்றுறை, செவ்.

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் கடந்த நான்கு ஆண்டுகளாகக் கடமையாற்றிய அப்போதிக்கரி திரு. எஸ். இராசரத்தினத்திற்கு புங்குடுதீவு மக்கள்சார்பில் சேவை நலம்பாராட்டு விழா நடத்தப்பட்டது. இப் பாராட்டு விழாவிற்கு தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் தலைமை வகித்தார். திரு. க. செல்லத்துரை திரு. சதாசிவம் உட்பட பலர் திரு. இராசரத்தினத்தின் சேவை நலத்தைப் பாராட்டிப் பேசினர்.

ஃ ஃ

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரப்பகுதிக்கு புதிய சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்ட திரு. பொ. இராசசுந்தரத்துக்கு ஓர் பாராட்டுக்கூட்டம் சுழிபுர மக்களால் அளிக்கப்பட்டது. விழாவுக்கு திரு. எஸ். மகாதேவன் தலைமைவகித்தார்.

திருவாளர்கள்: அ. அமிர்தலிங்கம் எம். பி., எஸ், சங்கரப்பிள்ளை, சு. கந்தசுவாமி அ. ஆறுமுகம், சு, சண்முகராத் தினசர்மா, செல்விபண்டிதைபாக்கியம், ஆ. செல்லத்துரை உட்படப் பலர் பேசினர்.

---

## மரவள்ளிக்கிழங்கினால் சுகவீனம்

உடுப்பிட்டி, செவ்.

நஞ்சூறின மரவள்ளிக்கிழங்குண்டு அபாய நிலையில் இருந்த ஒரு குடும்பம் உயிர் தப்பியது. கரணவாய் தெற்கு, தூதாவளை என்னுமிடத்தில் கந்தையா என்பவரின் குடும்பத்திலுள்ள நால்வரும் மரவள்ளிக் கிழங்கு சாப்பிட்டதால் கடுமையான வயிற்றோட்டத்தினால் அபாயகரமான நிலையிலிருந்து டாக்டர் பாலகிருஷ்ணனால் சிகிச்சை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து குணமடைந்துள்ளனர்

---

சுழிபுரம், செவ்

சுழிபுரம் தபால் கந்தோர் புதிய அதிபராக திரு. எஸ். தம்பிராசா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்புவில தபால் கந்தோரில் தபால் அதிபராக கடமையாற்றியவர்.

---

# 'யாழ்ப்பாணத் துணிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும்'

## திரு. ஸ்ரீகாந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

"அரசாங்கத்தின் தற்போதைய திட்டத்தின்படி இலங்கையின் பல பாகங்களிலும் நெசவுநிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்நெசவுநிலையங்களில் இன்று பல்லாயிரக் கணக்கான ஜவுளிகள் நெசவு செய்யப்படுகின்றன. இந்நெசவுத் தொழிலில் யாழ்ப்பாணத்து இளம் பெண்கள் காட்டும் அதிக ஆர்வத்தைக் காணும்போது நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இன்று நாடெங்கிலுமே மக்கள் நெசவு உடைகளிலேயே அதிக மோகம் கொண்டுள்ளதை நெசவு சேலைகள் விற்பனையாகும் தொகையிலிருந்தே நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. நெசவு செய்வதில் யாழ்ப்பாணத்தில் பெண்கள் எப்படி ஆர்வம் காட்டுகின்றார்களோ அப்படி நெசவு உடைகளை விற்பதிலும் யாழ்ப்பாணத்து ஜவுளி வியாபாரிகள் ஊக்கம் காட்டவேண்டும். தயாரிப்பாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்குமிடையில் கூட்டுறவு ஏற்பட்டால் நெசவுத் தொழில் இன்னும் நன்கு வளர முடியும்".

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் நடைபெற்ற சுண்டிக்குளி நெசவு நுண்கலைக் கழகத்தினரின் வருடாந்தவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா பேசுகையில் குறிப்பிட்டார்.

வண்ணார்பண்ணை இல்லக் கட்டிடத்தில் நடைபெற்ற இவ்வைபவத்துக்கு வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமை தாங்கினார். முன்னாள் வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தமது தலைமையுரையில், யாழ்ப்பாணத்து இளம் பெண்கள் நெசவுத் தொழிலில் எவ்வளவு ஊக்கமும், சுறுசுறுப்பும் உள்ளவர்கள் என்பதை அண்மைக்காலத்தில் நிறுவப்பட்டுள்ள நெசவுநிலையங்கள் மூலம் அறியக்கூடியதாகவிருக்கிறது என்று கூறினார்.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி தம்பையா, திருமதி ஸ்ரீகாந்தா, நல்லூர் அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. எம். அரசரத்தினம் உட்பட இன்னும் பலர் பேசினர். செல்வி கே. இராஜேஸ்வரி நன்றி தெரிவித்துப் பேசினார். விழா இறுதியில் கழக மாணவிகளின் நடன, நாடக நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ந. நி)

---

## ஓவியத்துறையில் பயிற்சி

உடுப்பிட்டி, புதன்


வல்வெட்டித்துறை, தெணியம்பை என்னுமிடத்தைச்சேர்ந்தவரான திரு. எஸ். சுந்தரலிங்கம் ஓவியத் துறையில் விசேஷ பயிற்சி பெறும் பொருட்டு இவ்வாரம் சென்னைசெல்லவிருக்கிறார்.

---

## மீன்பிடிக்கச் சென்றவர் கடலில்மூழ்கினார்

திருக்கோணமலை, புதன்

திருக்கோணமலையைச் சேர்ந்த சாந்தப்பு சந்தனசாமி (40 வயது) என்பவர் வேறு இருவருடன் வள்ளமொன்றில் புறப்பட்டு மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டபொழுது கடல் கொந்தளிப்புக்காரணமாக இவர்கள் சென்றபடகு கவிழ்ந்துவிட்டது. மூவரும் அதிர்ஷ்டவசமாகக் கரைநோக்கி நீந்தி வந்து கொண்டிருக்கையில் சந்தனசாமி ஒரு பெரும் ராட்சத அலையினால் மீண்டும் இழுத்துச் செல்லப்பட்டார். கடலிலே மூழ்கிய இவரின் உடல் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.




அதிக வனப்பும்
எழிலும்
லாவண்ணியமும்
பெற
பொன்ட்ஸ்
வனிஷிங் கிறீம்

உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமத்தைப் பாதுகாத்து, சோபை யூட்டி நாளுக்கு நாள் அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொண்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.




அழகெனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட
பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்

658/67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் நாடகக்கலையை விமர்சகர்கள் வளர்க்கவேண்டும்'

— கலையரசு சொர்ணலிங்கம்

இமையாணன், புதன்

"நாடகக்கலையை வளர்ப்பதை கைவிட்டு நாடகத்தின் குறைகளைக் கூறும் அளவிற்குத்தான் இக்கால விமர்சகர்கள் வளர்ச்சியடைந்திருக்கிருர்கள். இத்தவறை நீக்கி நாடகவளர்ச்சியில் விமர்சகர்கள் ஈடுபட்டு நாடகத்தை வளர்க்க வேண்டும்".

மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றக் காரியாலயத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலையரசு சொர்ணலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். இலங்கைக் கலைக் கழகத்தால் நடாத்தப்பெற்ற நாடகப் போட்டியில் மறுமலர்ச்சி மன்றம் "அந்த நாளும் வந்திடாதோ" என்னும் நாடகத்தை மேடையேற்றிப் பரிசு பெற்றமைக்கு, மன்ற அங்கத்தவர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை நாடக நூல் போட்டியில் பரிசுபெற்றமைக்காகவும் இத்தேநீர் உபசாரம் நடைபெற்றது. மன்றத்தலைவர் திரு. பொ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கலையரசு சொர்ணலிங்கம் மேலும் கூறியதாவது:-

புத்தகப்படிப்பை மட்டும், நாடக அனுபவம் இல்லாமல் சிலர் விமர்சனம் செய்கிருர்கள். "ஷேக்ஸ்பியர்" "இப்சன்" போன்ற மேல்நாட்டு ஆசிரியர்களின் நாடக நூல்களை வாசித்துவிட்டு, அந்நிலையில் வைத்து தமிழ் நாடகங்களுக்கும் பிழையானவிமர்சனம் செய்கிருர்கள். கொழும்பில் நடைபெறும் நாடகங்களின் நாட்டுக்கூத்தின் ஒப்பனை வேறு, வரலாற்று நாடக ஒப்பனை வேறு, சமூகநாடக ஒப்பனை வேறு என்பதை உணராமலும் பிழையான விமர்சனம் கூறுகிருர்கள். இப்படியான தவறுதல்களையும் பிழைகளையும், இனிமேலும் செய்யாமல் தமிழ் நாடகக் கலையை விமர்சகர்கள் வளர்க்கவேண்டும்.

சுதந்திரமடைந்த பின்னர் தான் நமது தமிழ் நாடகக்கலை வளர்ச்சியடையாமல் மந்த நிலையை அடைந்து வருகின்றது. மீண்டும் நமது நாடகக்கலை புத்துயிர் பெற்று வளர்ச்சியடைய வேண்டுமாகில் இந்தியாவில் உள்ள சிறந்த கலைஞர்கள் நம் நாட்டுக்குவந்து கலையை வளர்ப்பதற்கு தடையேதும் இருக்காமல செய்யவேண்டும்' மற்றும்பலரும்பேசினர்.

## நாடகவிழா

கரவராயன்குளம், புதன்

"தமிழ் மொழியின் நாடகக்கலையானது பழைய காலம் தொட்டே தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெற்றிருக்கின்றது. தமிழ் மக்கள் இக்கலையை ஒரு தெய்வீகக்கலையாகவே கருதி அதற்குத் தொண்டாற்றினர்கள். இதன்காரணமாக, எமது நாடக வளர்ச்சிக்கு எம்து மக்கள் பங்கெடுக்க வேண்டும்" என்று பாஷையூர் அருள் நாடகமன்றத்தினரின் நாடகவிழாவில் யாழ்ப்பாண மாநகரசபை முன்னுள் உதவி மேயர் திரு. ஜே எம். அழகையா கூறினர்.

பாஷையூர் அருள் நாடக மன்றத்தினரின் 'பவளாரவல்லி', 'கட்டப்பொம்மன்' ஆகிய நாடகங்கள் இடம் பெற்றன.

## அ. ஏ. வி. சங்கம் கோரிக்கை

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் ஒரு சமமான இடமாற்றத் திட்டத்தை உறுதிப்படுத்துமாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் திறைசேரி உதவிக்காரியதரிசிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கோரியுள்ளது

தண்டனை வழக்கு முகமாக யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட சிங்கள உத்தியோகத்தர்களை அவர்களது சொந்த நிலையங்களுக்கே திருப்பி அனுப்பும்படியும், அந்த இடங்களுக்குத் தமிழ் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும்படியும் சங்கம் கேட்டுள்ளது

## உடுப்பிட்டிசந்தையில் 'பாகப்பிரிவினை'

இமையாணன், புதன்

இடநெருக்கடி காரணமாக வியாபாரச் சந்தையிலும், பாகப்பிரிவினை ஒன்று நிகழ்ந்துள்ளது. உடுபபிடி சந்தையில் வியாபாரம் செய்யும் பெண்கள் அடிக்கடி சச்சரவு செய்வதனாலும், வேறு சில காரணங்களுக்குமாக, அப்பெண்கள் குறிக்கப்பட்டுள்ள இடத்துக்குள்ளேயே வியாபாரம் செய்யவேண்டும் என ஒவ்வொருவருக்கும் இடங்கள் அளந்து பிரித்து கொடுக்கப்பட்டுள்ளன.

## திருடர்கள் கால்வரிசை

கொழும்பு, புதன்

இம்பிரிகசபாவிலுள்ள ஒரு வீட்டில் நுழைந்து களவாடிய திருடர்கள், துலக்கப்பட்ட சிமெந்துத் தரையில் தமது கால் அடையாளங்கள் பதியாமலிருப்பதற்காகப் படுக்கை விரிப்புகளை விரித்துவிட்டு, முன்னெச்சரிக்கையுடன் களவை நடத்தினராம். களவெடுத்தவரான திரு ஏ எச் டபிள்யு. பெரேரா டோ தமது இழப்பு ரூபா 10,000 வரை இருக்குமெனப்பொலிசாரிடம் அறிவித்துள்ளார். நகைகள் மட்டுமே களவாடப்பட்டன.

கைவிரல் அடையாளங்களைப் படம் இலாகா நிபுணர்கள் சில பிடித்துள்ளனர்.

## உதைபந்தாட்ட முடிவுகள்

புன்னாலைக்கட்டுவன், புதன்

கட்டுவன் ஞானோதய விளையாட்டுக் கழகத்துக்கும் கோப்பாய் விளையாட்டுக்கழகத்துக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கட்டுவன் கழகம் 5-1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. எஸ் பத்மநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

தெல்லிப்பளை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்துக்கும், உரும்பராய் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் பளைலி ஆசிரிய கலாசாலை விளையாட்டிடத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், உரும்பராய் கழகம் 3-2 கோல்களால் வெற்றியீட்டியது.

## வல்வைகோஷ்டி வெற்றி

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை புளுஸ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்புளுஸ்கோஷ்டிக்கும் வதிரி பொம்மோஸ் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றது. போட்டியில் வல்வை புளுஸ் 2-1 கோல் போட்டு பொம்மோசை தோற்கடித்தது. நெற்கொழு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் திரு. வி இரத்தினவடிவேலு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## மாதகலுக்கு கிராமிய வங்கி

சுழிபுரம், புதன்

மாதகல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் ஒரு கிராமிய கூட்டுறவு வங்கியை தமது சங்கத்தில் கீழ் திறக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர் வெகு விரைவில் வங்கி திறக்கப்படவிருக்கின்றது.

## அபராதம்

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறைப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. பொன்னுத்துரை தலைமையில்சென்ற பொலிசார் பலாலியைச்சேர்ந்த கதிரன் நடராசா என்பவர் சட்டவிரோதமாக வடிசாராயம் வடிக்கவைத்திருந்த 192 'ரூம்' கோடாவை கைப்பற்றியபடின் கதிரன் நடராசாவையும் கைது செய்தார்கள் பின்னர் கதிரன் நடராசா மல்லாகம்மாஜிஸ்திரேட் திரு. டி. வஸ். நற்சிங்கா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ள மாஜிஸ்திரேட் எதிரியை அறு ரூபாய் அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார்

காங்கேசன்துறையைச் சேர்ந்த காசிபபிள்ளை இலிங்கநாயகம் என்பவர் சட்டவிரோதமாகச் சாராயம் கொண்டுசென்ற குற்றத்துக்காகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 50ரூபாய் அபராதம்விதித்தார்.

## அமெரிக்காவை காஸ்ட்ரோ கண்டிக்கிறார்

ஹவானு, ஜன. 4

கியூபாவுக்குச் செய்தியை உரத்தொழிற்சாலை அமைப்பதற்கென பிரிட்டன் அளிக்கவிருந்த கடனை அளிக்க வேண்டாமெனப் பிரிட்டன் மீது அமெரிக்கா வலியுறுத்தல் செய்வதை கியூபா பிரதமர் பிடெல் காஸ்ட்ரோ ஆத்திரத்துடன் இங்கு கண்டித்தார்கியூபாப்புரட்சியின் எட்டாவது ஆண்டு நிறைவு விழாவில் ஒருமபெரும் கூட்டத்தில்பேசுகையிலேயே அவர் கூறினர்.



## குருப்பட்டம் பெறுகிறார்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த வண. என். என். யோசேப் ஓ எம். ஐ. புதிய குருப்பட்டம் பெற்ருர். இவர் சென் பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவராவார். வண எமிலியானுஸ் யாழ்ப்பாண மேற்றாணி ஆண்டகையால் தனது முதற்பூசையை ஒப்புக்கொடுத்தார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம்

## 'சகல அதிகாரமும் பிரதமரிடம் இருப்பது தவருனது'

நாவலப்பிட்டி, புதன்

"ஸ்ரீமாவோ- சாஸ்திரிஒப்பந்தம் ஒரு நியாயமான ஒப்பந்தமே. ஆனல் அமுல் நடத்துவதில் சகல அதிகாரங்களும் பிரதமர் டட்லி சேனநாயகாவின் கையில் ஒப்படைக்கப் பட்டிருப்பது தான் தவருனதாகும்".

ல. தோ. தொ. யூனியன் மாத்தளை மாவட்டக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் மாவட்டப் பிரதிநிதி திரு சு. இராமநாதன் மேற்கண்டவாறு கூறினர்,

வத்தேகம மாவட்ட ல. தோ. தொ. யூனியன்தோட்டக் கமிட்டி தலைவர்கள், காரியதரிசிகள் இக்கூட்டத்தில் சமுகமளித்திருந்தனர், அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

"இம்மசோதாவில் இலங்கை அல்லது இந்தியப் பிரஜை அடையக்கூடியவர்களுக்கு என்னென்ன தகுதிகளிருக்க வேண்டும் என்ற விபரங்கள் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்து சிலவேளை தமக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் பிரஜாவுரிமையை வழங்கிவிட்டு, வேண்டாதவர்களை "இந்தியாவுக்குப் போ" என பிரதம கூறினலும் அதில் ஆச்சரியமில்லை எனவே அதிகாரத்தோரணையில் எதையும் செய்யாமல் மக்களின் திருப்திக்கேற்றவாறு நியாயமாக, இந்த ஒப்பந்தத்தை அமுல்நடத்துமாறு வேண்டுகிறேம்" என்ருர்.

## 'சைவமத வளர்ச்சிக்கு உதவவேண்டும்'

கொம்பனித்தெரு, புதன்

சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் திருவெம்பாவை இறுதி நாள்விழா, ஸ்ரீலங்கா உதவி அத்தியட்சகர் பண்டிதர் திரு. சு. சி. கதிரவேலு தலைமையில் நடைபெற்றது அவர் தமது தலைமையுரையில், சைவர்களாக இருந்தால் மட்டும் போதாது சைவமதம் வளர்ச்சி அடைவதற்கு பல சைவநிறுவனங்களை நிறுவி எங்கள் மதத்தை வளர்ச்சி பெற உதவி செய்யவேண்டும் என்று கூறினர். திரு. நா. குமாரசாமியும் பேசினர்.

லாகிரா

## கலலூரி வளர்ச்சிக்கு உதவவேண்டும்

### டாக்டர் கலீல் கோரிக்கை

கொம்பனித்தெரு, புதன்

மாதானை ஸாஹிராக்கல்லூரியின் 76-வது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது

விழாவைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் கல்லூரியின் சேமநலச் சங்கத் தலைவர் டாக்டர் எம். ஸி. எம். கலீல் கூறியதாவது-

"கடந்த கூட்டரசாங்கம் இக் கல்லூரியைப் பொறுப்பேற்று நடத்தி மிகச் சேவை மானநிலைக்கு இருந்தது. இதனை அறிந்து இக்கல்லூரியைப் பொறுப்பேற்று இருக்கிறும் முஸ்லிம் மக்களாகிய நாம் எல்லோரும் முன்வந்து இப்புனித கைங்கரியத்தைக்கருதி ஸஹிராக் கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்

தொழில்வேலைவிடமைப்பு அமைச்சர் ஜனப் எம். எச். முகம்மது பேசுகையில்ஸஹிராக்கல்லூரிக்கு முஸ்லிம்களாகிய நாம் உதவியளித்து அதனை வளர்ச்சியடையச் செய்வதே இப்புனித ரம்ஸான் மாதத்தில் முதல் கடமையாக இருக்கவேண்டும் என்று கூறினர்.

அட்டோர்னி ஜெனரல் அமீர், கொழும்புநகரமேயர் ஜாபூர் கான் உட்பட வேறு பலரும் பேசினர்.

## தென்வியட்னமுகது அமெரிக்க ஆதரவு

### ஜோன்சன் உறுதிமொழி

லைகோன், ஜன 4

தென்வியட்னம் பிரதமர் நாமெம்காவிக்கு அனுப்பியுள்ள புதுவருடச் செய்தியில், ஆக்கிரமிப்பை எதிர்க்கும் முயற்சியில் அமெரிக்கர்களின் உறுதியான ஆதரவு இடைக்கும் என அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்

தென்வியட்னமில் ஜனநாயக அரசாங்கம் இயங்கும் வகையில் தென்வியட்னம் சட்டசபை எடுத்துவரும் முயற்சிகளையும் அவர் பாராட்டினர்.

திரு க. பாலசுப்பிரமணி நன்றி கூறினர்.

உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான
"வைத்திலிங்கம்ஸ்"
இரும்பு - பித்தளை மர ஸ்குறு
ஆணிகளை
நீங்கள் வாங்குவதனல்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.
தயாரிப்பாளர்கள்:-
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழையசோனக தெரு, கொழும்பு-12
தொலைபேசி: 7143 — 2029
கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருக்கோணமலை துறைமுகம் தேசியமயமாக்கப்பட வேண்டும்"

திருகோணமலை, புதன்

இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தின் திருகோணமலைக் கிளைகளின் கூட்டுக்கமிட்டி அண்மையில் கூடிய போது, திருமலைத் துறைமுகத்தில் ஏற்பட்டிருக்கும் இக்கட்டான நிலையின் தற்போதைய முன்னேற்றங்கள் பற்றியும், மாற்றங்கள்பற்றியும் விரிவாக ஆராயப்பட்டன. இக்கூட்டுக் கமிட்டியின் தலைவரான திரு. துரை ரெட்ணம் துறைமுகக் கிளையின் காரியதரிசி பதவியிலிருந்து ராஜினாமா செய்து கொண்டதனால் தற்காலிகமாக திரு. இம்மானுவல் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இக்கூட்டுக் கமிட்டியின் காரியதரிசி திரு எஸ். ஜீவராசா, தாய்ச்சங்கத்தின் தற்போதைய நிலைமை பற்றியும், அரசாங்கத்துடன் தொடர்ந்து நடத்திய பேச்சுவார்த்தைகள் காரணமாக ஏற்கனவே தாய்ச்சங்கத்தின் பொதுச்சபைமுடிவு செய்ததுபோல் கொழும்புத் துறைமுகத்தில் பகிஷ்கரிப்பு நடவடிக்கையை எடுத்துக் கொள்ள முடியாமல் ஒத்திப் போடப்பட்டிருக்கிறது என்றும், இந்த முடிவு தாய்ச்சங்கத்தின் நிர்வாகசபையினால் செய்யப்பட்டது என்றும் தெரிவித்தார்.

பலத்த விவாதத்தின் பின்னர் இக்கமிட்டியின் உபகாரியதரிசி திரு கலியுகவரதனால் கொண்டுவரப்பட்ட பிரேரணையின்பிரகாரம், தாமதமின்றி கொழும்புத் துறைமுகத்தில் பகிஷ்கரிப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் இப்புதிய பகிஷ்கரிப்பு திருமலைத்துறைமுகம் தேசியமயமாக்கப்படும்வரைக்கும்தொடர்ந்து நடத்தப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

## நள்ளிரவில் நடமாடியவர்

இமையாணன், புதன்

திருடுவதற்கு முயற்சி செய்து சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்த ஒருவர் துரத்திக்கலைக்கப்பட்ட சம்பவமொன்று உடுப்பிட்டிச் சந்தைக் கருகாமையில் நிகழ்ந்துள்ளது.

உடுப்பிட்டிசந்தைக்கருகாமையிலுள்ள சந்தைவீதியில் சந்தேகத்திற்கிடமாக நள்ளிரவு இரண்டு மணியளவில் இந்த நபர் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தபொழுது எதிர்பாராத விதமாக அவ்விடத்துக்கு வந்த ஒருவர் பல கேள்விகள் கேட்டபின்னர் வேறு ஒருவரும் அங்கு வந்ததாகவும் இதனைக்கண்டு சந்தேக நபர் ஓடத்தொடங்கியதும் அவ்விருவரும் துரத்திக் கலைத்தனர் என்றும் ஆனால் சந்தேக நபர் மின்னல் வேகத்தில் ஓடி மறைந்துவிட்டதாகவும் கூறப்பட்டது.

## பிரிவுபசாரம்

உடுவில், புதன்

சுன்னாகம் பட்டினசபையில் மின்சார சுப்பிரின்டனாக கடமையாற்றிய திரு. பீ. வட்டுவங்கல எக்பிட்டியா பட்டினசபைக்கு மின்சார சுப்பிரின்டனாக மாற்றலாகி செல்வதை முன்னிட்டு அவரின் சேவையைப்பாராட்டி ஓர் பிரிவுபசார விழா நடைபெற்றது. சுன்னாகம் பட்டினசபை மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தலைமை வகித்து பேசும் பொழுது, சுன்னாகம் பட்டினம் இன்று குறையின்றியின்றி ஒளிபெற்றிருப்பதற்கு மூலகாரணம் திரு. வட்டுவங்கல என்று கூறினார். டாக்டர். ஆ. நடராசா உட்பட வேறும் பலர் அவரின் சேவையை பாராட்டிப் பேசினர்.

## சமயபாட பரீட்சை

### பரிசுபெற்றோர் விபரம்

காரைநகர், புதன்

அகில காரைநகர் சமயபாடப் பரீட்சையில் பரிசு பெற்றோர் விபரம்:

கீழ்ப்பிரிவு: தி. தேவராசா, வலந்தலை தெற்கு, அ. மி. பாடசாலை. நா. சரோஜினிதேவி வலந்தலை தெற்கு, அ. மி. பாடசாலை. த. சிவதாசன் இலகடி த. க. பாடசாலை. ஏ. பால சுப்பிரமணியம் களபூமி அ. மி. பாடசாலை. ஐ. நாகரத்தினராசா கிழவன் சைவ பரிபாலன வித்தியாசாலை நீ. கிருஷ்ணமூர்த்தி மெய்கண்டான் பாடசாலை.

மத்தியபிரிவு: ம. மகேசுவரி மகளிர் வித்தியாலயம் த. சிவசோதி, ப. விக்னேசுவரன், ந. சிதாதேவி யாழ்நகர்க் கலாசாலை ந. அருணாம்பிகை மகளிர் வித்தியாலயம்.

மேற்பிரிவு: சி. சிவானந்த சர்மா யாழ்நகர்க் கலாசாலை. கா. தவராசா தனிப்பட்டவர், என் சரசுவதி, பொ. நவரத்தினராசா, எஸ். கமலாதேவி யாழ்நகர்க் கலாசாலை.

முதியோர் பிரிவு: திருமதி இ. தில்லையம்பலம்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா

கைதடி நாவற்குழி தெற்கு ம. நோ. கூ. சங்கத்தின் 2வது வருடாந்தக் கூட்டம் மகா விஷ்ணு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சங்கத்தலைவர் திரு க. சதாசிவம், தலைமையில் நடைபெற்றது. அப்போது பின்வருவோர் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு ம. ஆறுமுகம் உப. தலைவர் செ. முத்துலிங்கம், காரியதரிசி வே பொன்னம்பலம் த. கதிரமலை சி. சின்னப்பா சி. மார்க்கண்டு, சி வயிரமுத்து, பொ. கணபதிப்பிள்ளை, க. ஆறுமுகம் ஆகியோர் நிர்வாக உறுப்பினராகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

## பரிபாலன சபைபுதிய நிர்வாகிகள்

சங்கானை, புதன்

சண்டிலிப்பாய் வடக்கு ஆலங்குழாய் முருகமூர்த்தி கோவில்பரிபாலனசபைமுதலாவது ஆண்டுநிறைவுக்கூட்டம் ஆலய முன்றலில் திரு. செ. தில்லையம்பலம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட, உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் திரு. செ. தில்லையம்பலம் ஆசிரியர் காரியதரிசி திரு. பொ. செல்வரத்தினம். தனாதிகாரி ச. தர்மவரதர்.

இருபது பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் கச்சேரி பென்சன் கிளையில் கடமையாற்றும் திரு. ந அனந்ததேவன் இவ்வருடம் ஜனவரி16-ந் தேதி தொடக்கம் கொழும்பில் நீதிமுறைச் சேவை ஆணைக்குழுக் கந்தோருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## 'தன்னலமற்ற சேவைக்கே பட்டம்'

காரைநகர், புதன்

"தங்களது தன்னலமற்ற சேவையின் நாட்டிற்கு நற்குணோரைக் கௌரவிக்கும் நோக்குடன் தேசிய அரசாங்கம் சமாதான நீதவான் பட்டத்தை சிலருக்கு வழங்கியுள்ளது. அக்கவையில் ஆயுர்வேத வைத்தியர் திரு இராசசேகரமும் ஒருவர். பல துறைகளிலும் முன்னணியில் நின்று அயராது உழைக்கும் இவரது சேவை மனப்பான்மையை இன்றைய இளைஞருக்கு ஒரு முன்மாதிரியாகும்" என வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் திரு. க. இராசசேகரம் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டதை பாராட்டுமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். மேற்படி கூட்டம் காரைநகர் யாழ்நகர்க் கல்லூரி மைதானத்தில் தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. பற்றிக் தலைமையில் நடைபெற்றது. இந்துக்கல்லூரி அதிபர் திரு ஆ. தியாகராசா பேசும் போது 'கல்வி மந்திரியின் கல்வித் திட்டம்வருங்கால வழக்கத்திற்கு நன்மை பயக்கக் கூடியது" என்று கூறினார். சமாதானநீதவான் பட்டம் பெற்ற ஆயுள்வேத வைத்தியர் திரு. க. இராசசேகரத்தின் சேவையைப் பாராட்டி திருவாளர்கள் ஆர். கந்தையா, பொ. அம்பலவாணர், வைத்தியலிங்கம், செல்வி க. பூரணம், திருமதி குஞ்சிதம்பி ஆகியோர் பாராட்டிப் பேசினர். வித்துவான் முருகேசு நன்றி கூறினார்

## கடமை உணர்ச்சி வேண்டும்

வவுனியா, புதன்

"அரசாங்க ஊழியர்களுக்கு நேர்மை, கடமை, கட்டுப்பாடு போன்ற சிறந்த குணாதிசயங்கள் ஒருங்கே அமைந்திருப்பதால் தான் பொதுமக்களுக்கும் அரசாங்கத்திற்கும் எதுவித பிரச்னைகளும் எழாது எமதுநாடு அமைதியானமுறையில்முன்னேற உதவியாக இருக்கும், இந்த வகையில் அரசாங்க ஊழியர்களுக்கு உதாரணமாக விளங்கியவர்கள் திருவாளர்கள் பி. துரைசிங்கம், எ. வின்சிலோஸ்".

இவ்வாறு வவுனியா முல்லைத்தீவு பிரதி பிஸ்காலாகக் கடமையாற்றி திரு. எ. வின்சிலாசிற்கும் வவுனியா-முல்லைத்தீவு பிஸ்கால் காரியாலய உத்தியோகத்தர்களால் வவுனியாக்கச்சேரியில் வைத்து அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்திற்கு தலைமைதாங்கிப் பேசிய வவுனியாக் கச்சேரி காரியாலய உதவியாளர் திரு. சி. நாகலிங்கம் குறிப்பிட்டார்.

திருவாளர்கள்: ஆர். யே. இராசநாயகம், சி. அமிர்தலிங்கம், கே. நவரத்தினம், வ. சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட பலர் அவர்களது சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

## பல் வைத்திய . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்தில் யாழ்ப்பாணத்தில் மட்டுமே விசேஷ பல் வைத்திய பிரிவு இருந்துவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பல் வைத்திய நிபுணர்கள் சங்கத்துக்கும் அரசாங்கத்துக்குமிடையில் 1948-ம் கோரிக்கைகள் பற்றி பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானதாகவும் ஆனால் இதுவரை [illegible] இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நள்ளிரவு வீதியால் ஓடிய வேலைக்கார இளம்பெண்

கொழும்பு, புதன்

பதினைந்துவயது வேலைக்காரப்பெண்ணொருத்தியை நிர்வாணகோலத்துடன் நள்ளிரவில் வீதிவழியே பதைக்கப்பதைக்க ஓடிக்கொண்டிருந்தபோது பொலிசார் பாதுகாப்பளித்துக் கொண்டனர் அந்தப் பெண்ணை தகாதமுறையில் நடத்தி துரத்திக்கொண்டுவந்ததாக கூறப்படும் வர்த்தகர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இவ் இளம் பெண் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

தனது மனைவியையும் பிள்ளைகளையும் சினிமாவுக்கு அந்த வர்த்தகர் அனுப்பிவிட்டு தனதுவீட்டில் வேலைக்காரியாக இருந்த இந்தச் சிறுமியை தனியறைக்குள் பூட்டி பலாத்காரமாகத் தகாதமுறையில் நடத்தினாரென்றும், பின்னர் பெண்ணுக்கு சாராயம் பருக்க முயன்றபோது மறுத்து வீதிவழியே ஓடியதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கத்து வீட்டுக்காரர் வேலைக்காரச்சிறுமியின் கதறல் சத்தம்கேட்டு போன் செய்ததால் பொலிசாரால் வீதியில் அவல நிலையிலிருந்த பெண்ணைக் காப்பாற்ற முடிந்ததாகத்தெரிகிறது.

## இயந்திரத்தில் நசுங்குண்டார்

யாழ்ப்பாணம், வியா

ஆனையிறவு உப்பளத்திற்குச் சொந்தமான இயந்திரம் ஒன்றின் சாரதியாகக் கடமையாற்றும் இளைஞர் ஒருவர் அந்த இயந்திரத்தினால் நசுங்குண்ட நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆனையிறவைச் சேர்ந்த மீரான்சாகிபு சினிமுகம்மது என்ற 18 வயது இளைஞரே காயங்களுக்குள்ளானவர். சம்பந்தப்பட்ட இயந்திரத்தைச் செலுத்திக் கொண்டிருக்கையில் இயந்திரத்திலிருந்து தவறி வீழ்ந்ததால் சில்லுக்குள் அவர் நசுங்குண்டதாகப் பொலிஸ் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (நநி)

## எதிரிக்கு ரூ. 100 அபராதம்

யாழ்ப்பாணம், வியா.

உலக்கையால் அடித்து காயப்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ஒருபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் தம்பையா முத்துத்தம்பி என்பவரை, நவசிவாயம் துரையப்பா உலக்கையால் அடித்து படுகாயப்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிர் சார்பில் அட்வகேட் எஸ். ஜெயசிங்கம், புறக்டர் வி. கனகசபையின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளி சார்பில் பொலிசாருடன் புறக்டர் தளையசிங்கம் யோகநாதன் ஆஜரானார்.

## இன்று

யாழ்ப்பாணம், வியா.

செல்வன் இரவிச்சந்திர மதியாபரணத்தின் (வயது 10) மிருதங்க அரங்கேற்றம் யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் இன்று மாலை [illegible] வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெறும். [illegible] சங்கீதபூஷணம் திரு ஏ எஸ் இராமநாதனின் மாணவராவார்

## கிரிக்கெட் டெஸ்ட்

### இந்தியா

1-வது இனனிங்ஸ் 167

2-வது இன்னிங்ஸ் 5-137

கல்கத்தா, ஜன. 4

மேற்கிந்தியா - இந்தியா கோஷ்டிகளுக்கிடையிலான 2-வது கிரிக்கெட் டெஸ்டின் 4-வது நாளான இன்று, இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 167 ஓட்டங்களைப் பெற்றது. இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து இந்தியா தன்னைக் காப்பாற்றிக் கொள்ள 225 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது. ஆனால் இன்றைய ஆட்டம் நிறுத்தப்படும் போது இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை நஷ்டத்திற்கு 137 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. காலநிலை சீராக இல்லாத காரணத்தினால் இன்றைய ஆட்டம் அரை மணித்தியாலம் முன்னதாகவே நிறுத்தப்பட்டது. மேற்கிந்தியக் கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் 390 ஓட்டங்களைப் பெற்றிருந்தது இன்றைய முடிவுப்படி இந்தியா இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்துக் கொள்ள 90 ஓட்டங்கள் தேவை.

## வங்கி ஊழியர் வேலை நிறுத்தம்?

கொழும்பு, புதன்

இலங்கை வங்கிஊழியர்கள் யூனியன் தனது அங்கத்தவர்களை வேலை நிறுத்தத்துக்குத் தயாராக இருக்குமாறு கேட்டுள்ளது.

இதற்கிடையே வேலை நிறுத்தத்தை தடுப்பதில் தொழில் கமிஷனர் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டுவருகிறார்.

## கூப்பன் புத்தகங்கள்

### திருப்பிக்கொடுக்க மறுப்பு

கொழும்பு, புதன்

பங்கீட்டுச்சிப் புத்தகங்களை அடகுவைத்திருந்தவர்கள் இலவச அரிசி பெறுவதற்காக மீண்டும் அடகு வைத்திருந்தவர்களிடமிருந்து பெற்றுள்ளதாகவும் பங்கீட்டுச்சிப்புத்தகத்தைப் பெற்ற பணம் கொடுத்தவர்களில் பலர் புத்தகங்களை திருப்பிக் கொடுக்க மறுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உரும்பராய் வழியாக புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், வியா

கச்சாயிலிருந்து உரும்பராய்ஊடாக யாழ்ப்பாணத்துக்கு புதிய பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

உரும்பராய் தமிழ் அரசுக் கட்சிவாலிப முன்னணியின் காரியதரிசி திரு ந. கரியரத்தினம் இப்புதிய பஸ் சேவைக்குமுயற்சிகள் எடுத்திருந்தார்.

## நன்றி நவிலல்

ஸ்ரீமதி பார்வதியம்மாள் சுப்பிரமணிய தேசிகரின் மரணச் சடங்கின்போது நேரில் வந்தும், அனுதாபச் செய்தி அனுப்பியும் துக்கத்தில் பங்குகொண்ட உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அன்னாரது கணவரும் மக்களும் தங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

2224

இப்பத்திரிகை: "ஈழநாடு" லிமிடெட் சார்பாக அச்சகத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜனவரி 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org